முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1241

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

21.02.2023, செவ்வாய்கிழமை

1. ஞானவேலிகொண்ட அரங்கனே
   ஞானிகள் துணைகொண்ட தேசிகனே
   தானதர்மத்தைக் கொண்டு பேருலகை தக்கபடி
   தானதர்ம வழிகாட்டி இனிதே
2. இனிதே ஞானலோகமாக்க
   இணையில்லா சேவையாற்றும் அரங்கனே
   கனிவேலவன் யானும் உந்தனுக்கு ஞானஅறிவுரை ஆசி
   கண்டுரைப்பேன் சுபகிருது சால் திங்கள் தன்னில்
   (சுபகிருது வருடம் மாசி மாதம் 09 ம் நாள், 21.02.2023 செவ்வாய்கிழமை)
3. தன்னிலே அரங்கனே கலியின் சிறந்த தவசி
   தரணியை மாற்றும் மகாயோகி
   அண்ணலின் அவதார மகிமை அறிந்து
   அகிலத்தார் ஒன்றிணைந்தால் போதுமிந்த உலகில்
4. உலகில் சடுதி மாற்றங்காணும்
   உண்மை நிறைந்த ஞானவான்கள் தலைமைகூடி
   கலகம் துன்பம் இல்லாத பாதுகாப்பாய்
   கலியுகம் அரங்கன் அருளாலே ஞானயுகமாக மாறும்
5. மாறுதலோடு ஞானவான்கள் தலைமை கூடி
   மக்களை பாதுகாக்கின்ற ஆற்றல்மிக்க
   ஆறுதல்கொண்ட ஞானத்தலைமையாக உருவாகி
   அகிலமே ஞான ஆட்சி காணக்கூடும்
6. கூடவே அரங்கன் தொடர்பாலே
   குவலயத்தில் இந்த அற்புதம் நிகழும்
   நாடெங்கிலும் அரங்கன் அவதார மகிமை அறியப்படவேண்டும்
   நன்மைவேண்டி உலகோர் அரங்கனை நோக்கி சரணடைவு காணவேண்டும்
7. வேண்டிவேண்டி உலகோர் ஓங்காரக்குடில் நோக்கிவர
   விரைந்து இந்த மாற்றம் பேருலகம் கண்டு
   தொண்டர்களாக ஞானவான்கள் படை நிரம்ப
   தெய்வபலத்தோடு உலகில் ஞான ஆட்சியாக மலரும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–